## 19 ஆய்வுப்பொருள்: மூன்று:- இறை கட்டளைகளின் வழியில் நீதியாகவும் ஒழுக்கமாகவும் வாழ்வர்

### 3.3. தூய்மை நிறைந்தோராய் வாழ்வோம்

- உலகம் எவ்வாறு வெற்றியடைந்தாலும் குடும்பத்தில் ஒன்றுபட்டு வாழ்வதன் மூலம் அனைத்து தடைகளையும் வெற்றிகொள்ள முடியும். சற்று சிந்தியுங்கள்.

கணவனும் மனைவியும் ஒன்றுபட்டு செயலாற்றுதல்

பெற்றோரின் விருப்பத்தின்படி செயலாற்றும் பிள்ளைகள் வெற்றி பெறுதல்

ஆசைப்படும் அனைத்திற்கும் அடிமையாகாதிருத்தல்

பெற்றோரை வணங்குதல்

நல்லதொரு முன்மாதிரிகையான குடும்பமாகுதல்

எமது ஆடைகள் பிறரை பாவத்தில் விழச் செய்யாதிருத்தல்

மதுவுக்கு அடிமையாகாதிருத்தல்

இத்தலைப்புகளிலிருந்து நீர் எவற்றை அறிந்து கொள்கிறீர்?

முழு மனித வர்க்கமும் விண்ணகப் பேற்றினை அடைய வேண்டுமென்பதே கிறிஸ்துவின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை அடையவே, இவ்வுலக வாழ்வு நமக்கு அருளப்பட்டிருக்கின்றது. அவ்வாறெனில் நாம் இவ்வுலகில் சமனற்ற வாழ்வு வாழாமல் சமனான வாழ்வு வாழ்வதன் மூலம் நம் அயலவரையும் அன்பு செய்து வாழ வேண்டும்.

தூய வாழ்வு என்பது குறிப்பிட்ட ஒரு சாராருக்கு மட்டும் உரியதல்ல. அது குருத்துவ, துறவறத்தாருக்கு மட்டும் உரியது என்ற தவறான எண்ணம் பலரிடம் உண்டு. தத்தம் வாழ்க்கை நிலைக்கேற்ப செயற்பட்டு இறைவனுக்கு அன்பு செய்வதென்பது எவரும் செய்யக்கூடிய காரியமே. தூய ஆன்மீக வாழ்வு வாழ இறை கற்பனைகளைக் கடைப்பிடித்து வாழ்வோமாயின் இறைவனையும் அயலவரையும் அன்பு செய்யலாம்.


விண்ணகத்திலுள்ள இறைதந்தையைப் போல பரிசுத்தராக நாமும் மாற வேண்டும் என்பதே நமக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பாகும். இவ்வாழ்வை எவ்வாறான முறையில் வாழ வேண்டும் என்பதைச் சுருக்கமாக இயேசு மலைப்பொழிவில் கூறியிருக்கின்றார்.

> தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்;
> ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.
> (மத். 5:8)


''சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில், இறையாட்சி இத்தகையோருக்கே உரியது'' எனக் கிறிஸ்து கூறினார். காரணம் சிறுவர் உள்ளங்களில் பொய்யோ, வஞ்சனையோ, பொறாமையோ இல்லை. அவர்களது உள்ளம் தூய்மையானது. நாமும் குழந்தைகள் போல தூய உள்ளத்தோடு இருக்க வேண்டும். நல்ல விடயங்களைக் கேட்க வேண்டும்; பேச வேண்டும்; சிந்திக்க வேண்டும்.



தீயவற்றைப் பார்க்காதே



தீயவற்றைப் பேசாதே



தீயவற்றைக் கேட்காதே



இலவச விநியோகத்திற்காக

நல்லவற்றைக் கேட்போம்
நல்லவற்றைப் பார்ப்போம்
நல்லவற்றைப் பேசுவோம்

தனிநபர் ஒருவருடையதைப் போலவே குடும்பத்தினதும் தூய்மையான நிலைப்பாட்டிற்காக கடைப்பிடிக்கக்கூடிய நல்லொழுக்க விழுமியங்கள் இரண்டினை கிறிஸ்தவ நற்பண்புகளாக நாம் இங்கு முன்வைக்கலாம். திருமணமான ஆண், பெண் இருவரும் தத்தமது கற்பு நிலையைக் காத்துக்கொள்ள வேண்டும். கற்புக்கெதிரான எந்தவொரு செயலைச் செய்வதும் ஆசைப்படுவதும் துர்நடத்தையுள்ள சமூக விரோதச் செயலாகும். எனவே, இது இறைவனுக்கு விரோதமான செயலென்பதை நினைவுபடுத்துகிறோம்.

**தூய பவுலின் அறிவுரையைப் படிக்கவும்.**

உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல.
(1கொரி. 6:19)

மேற்கூறப்பட்ட திருவிவிலியப் பகுதிக்கேற்ப மனிதனுடைய உடல் தூய்மையானதொன்றாகும். எனவே, தன்னுடைய சொந்த உடலைப் பற்றிய மேலான உணர்வு கிறிஸ்தவனுக்கு இருக்க வேண்டும்.

கிறிஸ்தவன் தம் உடைகள் மட்டில், தம் நடத்தை மட்டில் விழிப்பாக இருக்க வேண்டும். நல்ல வார்த்தைகளைப் பேச வேண்டும். உணர்ச்சிகளுக்கு அடிமையாகாமல் நடத்தையில் தூய்மையைக் கடைப்பிடிப்பதற்கான ஆன்ம பலத்தை வளர்த்தல் வேண்டும்.

6ம் கற்பனை

"விபசாரம் செய்யாதே."

விப.20:14

9ம் கற்பனை

"பிறர் வீட்டை கவர்ந்திட விரும்பாதே."

விப.20:17

''தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில், அவர்கள் கடவுளைக் காண்பர்'' என்று கிறிஸ்து போதித்தமைக்கான காரணம் கிறிஸ்தவன் நடத்தையில் தூய்மையைக் கடைப்பிடித்தல் அதி உயர்ந்த மனிதப் பண்பாகும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகும்.

இப்படிப்பினைகளை மென்மேலும் அறிந்துகொள்ள பின்வரும் திருவிவிலியப் பகுதியை வாசிக்கவும்.


**மத்தேயு 5:27-30**

மனிதனது உடல், உள மாற்றங்கள் யாவும் இயற்கையாகவே நடைபெறும் செயலாகும். வயதுக்கேற்ப பருவ மாற்றங்கள் ஏற்படும். இதற்கு எதிராக கீழ்த்தரமான எண்ணங்களை ஏற்படுத்திக் கொள்வது இறைவனை நிந்திப்பதற்குச் சமனாகும். எனவே, எமது உடல் வளர்ச்சியானது இறைவனுடைய விருப்பத்திற்கேற்ற முறையில் செயற்படுவதற்கு இடமளிக்கப்பட வேண்டுமென்பது நமது கடமையாகும்.

கற்புநெறி தவறுகிறவன் மதிகேடன். அவ்வாறு செய்வோன் தன்னையே அழித்துக்கொள்கின்றான்.

(நீ.மொ. 6:32)

- குடும்ப வாழ்வின் தூய்மைக்கு எதிரான செயல்களைக் கண்டு, பின்வரும் வெற்றிடங்களில் நிரப்புக.




**மேலதிக கற்றலுக்கு:**

- புனித மரிய கொறற்றி
- புனித அக்னஸ் ஆகியோரின் வாழ்க்கையில் அவர்கள் எவ்வாறு தூய்மையாக இருந்தார்கள் என்பதை அவர்களின் வரலாற்றினைக் கற்று அறிந்து கொள்ளுங்கள்.

## குழுச்செயற்பாடு

- கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகளைப் பற்றி குழுவாகக் கலந்துரையாடி இவற்றைத் தவிர்ப்பதற்காக காரணிகளை முன்வைக்குக.

1. நீலத் திரைப்படங்கள் பார்ப்பதைத் தவிர்த்தல்.
2. மதுபானம் அருந்துதல்.
3. பிறருடன் தகாத உறவு.
4. ஓரினச் சேர்க்கை.
5. தகாத பத்திரிகைகள் படித்தல்.

## மாணவர் செயற்பாடு

- 6ம், 9ம் கட்டளைகளுக்கு எதிரான செயற்பாடுகளை அறிந்துகொள்ளல்.
- இச்செயற்பாடுகளின் பிரதிபலன்களையும் சமூகத்தை பாதிக்கும் வழிமுறைகளையும் பற்றிக் கலந்துரையாடுக.
- அச்செயற்பாடுகளால் சமூகத்திற்கும், பிள்ளைகளுக்கும் ஏற்படும் தீமைகள்.
- நீர் இவ்வாறான செயற்பாடுகளுக்குட்பட்டால் உமக்கு நடைபெறுவதென்ன? நீர் செய்ய வேண்டியதென்ன?

- கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சியை வாசித்து, அந்நிகழ்ச்சியின் மூலம் நீர் உமது வாழ்க்கைக்கு எடுக்கக்கூடிய முன்மாதிரிகை என்ன என்பதைக் கலந்துரையாடவும். அம்முன்மாதிரிகைகளை உமது பயிற்சி நூலில் குறித்துக் கொள்ளவும்.

### மரிக்க நேர்ந்தாலும் எனது இறைவாழ்வை அழிய விடமாட்டேன்.



அவளின் வயது 12. தந்தையின் மரணத்தின்பின் அவள் தாயுடன் சேர்ந்து தன் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள். தன் இளைய சகோதரர்களைப் பாதுகாத்துக்கொண்டு, இறைவனை அன்பு செய்வது எவ்வாறென்றும், அவரிடம் செபிப்பது எவ்வாறென்றும் அவள் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். இவ்வாறு மரியா அழகிலும், ஆன்மீகத்திலும் சிறந்து விளங்கினாள்.

ஒரு நாள் மரியா தனது வீட்டில் தனியாக இருந்த சந்தர்ப்பத்தில் ஓர் இளைஞன் தவறான எண்ணத்துடன் அவளை அணுகினான். அவளைப் பாவத்தில் வீழ்த்த நினைத்தான். மரியா அதற்கு மறுத்ததால் கோபத்திற்கு ஆளான அவ்விளைஞன் அவளைக் கத்தியால் குத்தினான். மரியா இறக்கும் தறுவாயிலிருக்கும்போது தன் தாயை அழைத்து, ‘அம்மா, நான் முதன்முறையாக தேவநற்கருணை பெற்றபோது இயேசுவுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டேன்’ என்றாள்.



இலவச விநியோகத்திற்காக